DEPOSITION OF WITNESS

(Chapter XXIII code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, COIMBATORE.

| | | |
|---|---|---|
| Calendar | } | CC.1329 /2019 PW 1 (LW1 ) |
| Preliminary Register | } | |
| Name | } | அமுதா |
| Father's name | } | |
| Taluk | : | |
| Village | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the day of

**Date: 02.01.2023**

**முதல் விசாரணை**

1) நான் ரெட்டியார்பட்டியில் குடியிருந்து கொண்டு என் அம்மாவுடன் வசித்து வருகிறேன். கார்மெண்ட்ஸ் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். 1 ம் எதிரி என் கணவர் மற்ற எதிரிகள் 1 ம் எதிரியின் உறவினர்கள். எனக்கும் 1 ம் எதிரிக்கும் 03.06.2011 ம் தேதி நீலகிரியில் உள்ள எஸ்டேட் சர்ச்சில் வைத்து திருமணம் நடைபெற்றது. எனக்கு திருமணத்தின் போது 19 பவுன் நகையும், சீர்வரிசை பாத்திரங்களும் ரொக்கம் ரூ.30,000/-மும் என் பெற்றோர்கள் கொடுத்தார்கள். வீடு வாங்குவதாகச் சொல்லி என்னுடைய நகைகளை வாங்கிக்கொண்டார்கள். ஆனால் வீடு எதுவும் வாங்கவில்லை.

2) என் கணவர் என்னை பிடிக்கவில்லை என்றும், அவருடை பெற்றோரின் வற்புறுத்தலால் தான் திருமணம் செய்து கொண்டேன் என்றும் சொன்னார். இரவு அவருக்கு தமிழ்ச்செல்வி என்ற பெண் அடிக்கடி போன் செய்வார். இது பற்றி நான் கேட்டதற்கு என்னை அடித்துவிட்டார். என்னை காதில் அடித்துவிட்டதால் ரத்தம் வந்து அறுவை சிகிச்சை செய்ய வேண்டியதாகிவிட்டது. எனக்கு இடது காது கேட்காமல் போய்விட்டது. என்னுடன் வாழ முடியாது என்றும் என்னுடன் 1 ம் எதிரி சேர்ந்து வாழ

வேண்டும் என்றால் எங்கள் வீட்டில் சென்று பணம்நகை வாங்கி வருமாறு என் கணவரும், என் கணவரின் அப்பா அம்மாவும் சொன்னார்கள். எனக்கு குழந்தை பிறந்திருந்தது. என் குழந்தையை பார்க்க ஒரு முறை தான் வந்தார். அதற்கு பிறகு குழந்தையை பார்க்க வரவில்லை. அது பற்றி கேட்டதற்கு நகை பணம் கொடுத்தால் தான் வருவேன் என்று சொல்லிவிட்டார். அதன் பிறகு நான் ஆலங்குளம் காவல் நிலையத்தில் 03.12.2013 ம் தேதியில் புகார் கொடுத்தேன். அந்த புகார் அங்கிருந்து கோவை துடியலூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்திற்கு மாற்றப்பட்டுவிட்டது. என்னை விவாகரத்து செய்யாமல் 1 ம் எதிரி வேறு பெண்ணை திருமணம் செய்து கொண்டார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனக்கும் 1 ம் எதிரிக்கும் எங்கள் ஊர் பாதிரியார் மற்றும் அந்த சர்ச்சில் உள்ள பாதிரியார் முன்னிலையயில் தான் திருமணம் நடந்தது. நான் இந்து என் கணவர் கிறிஸ்துவ மதத்தை சார்ந்தவர். கிறிஸ்துவ முறைப்படி தான் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது நகைகள் பணம் பெரியோர்கள் முன்னிலையில் வைத்து கொடுக்கப்பட்டது. பாதிரியார் பெயர் தெரியாது. பாதிரியார் முன்னிலையில் தான் நகை பணம் கொடுக்கப்பட்டது என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். 1 ம் எதிரி என்னுடன் அன்பாகவும் பாசமாகவும் இருந்ததால் தான் நான் கருவுற்றேன் என்றால் சரிதான்.

2) வீட்டிற்குத்தேவையான பொருட்களை 1 ம் எதிரி தான் வாங்கித்தருவார் என்றால் சரிதான். என்னுடைய மாமனார், மாமியார் ஆகியோர் தற்போதும் எஸ்டேட்டில் தான் தங்கி இருக்கிறார்கள் என்று சொன்னால் சரிதான். திருமணத்திற்குப்பிறகு மாமனார், மாமியார் என்னுடன் நரசிம்மநாயக்கன்-

பாளையத்தில் குடியிருந்தார்கள். என்னுடைய மாமனார், மாமியார் எஸ்டேட்டில் தான் பணிபுரிந்து பதிவேட்டில் கையெழுத்து செய்து வந்து தங்கி வந்தார்கள் என்றும், சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் மட்டும் தான் அவர்களுடைய சிறிய மகன் வீட்டிற்கு வருவார்கள் என்றும் அவர்கள் எங்களுடன் நரசிம்மநாயக்கன்பாளையத்தில் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. எங்களுடன் இருந்தார்கள்.

3) 1 ம் எதிரி எல்ஜிபி கம்பெனியில் வேலை செய்து வந்தார். 1 ம் எதிரி ரூ.15,000/-ம் சம்பளம் பெற்று வந்தார். என் மாமனார் எவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்று எனக்கு தெரியாது. என் மாமியார் அட்டை கம்பெனியில் வேலை செய்து ரூ.5,000/-ம் சம்பாதித்து வந்தார். என் கணவரும் அவரது குடும்பத்தாரும் ஏழ்மை நிலையில் உள்ளார்களா என்றால் இல்லை. வசதியாகத்தான் இருக்கிறார்கள். 1 ம் எதிரியின் உறவினர்களும் நல்ல வசதியாகத்தான் இருக்கிறார்கள். நான் என் கணவரையும், மாமியாரையும், மாமனாரையும் நான் கெட்ட வார்த்தைகளால் பேசியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு பேசவில்லை.

4) என்னுடைய அண்ணன் கூலி வேலை செய்து வருகிறார். என் அம்மா வேலைக்கு செல்வதில்லை. திருமணத்தின் போதுஎன் அம்மா பீடி சுற்றித்தான் சம்பாதித்து வந்தார். வாரம் ரூ.400/-, ரூ.500/- சம்பாதித்து வந்தார். எனக்கு இரண்டு மூத்த சகோதரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இருவருக்கும் எனக்கு முன்பாகவே திருமணம் நடைபெற்றுவிட்டது. தினமும் ரூ.200/- கூலிக்கு வேலை பார்த்து பெற்று வருகிறார்கள். என் அம்மா கூலி வேலை செய்து வருவதால் எவ்வாறு 19 பவுன் நகை போட்டார்கள் என்றால் என் அம்மா பெயரில் உள்ள வீட்டை விற்று தான் வந்த பணத்தை கொண்டு எனக்கு நகை பணம் கொடுத்தார்கள். 2011 ம் ஆண்டு இடம், வீட்டை விற்றோம். திருமணத்தின் போது நகை பணம் பொருட்கள் சீதனமாக கொடுத்ததற்கு சர்ச்சின் முன்னிலையில் எழுத்துப்பூர்வமாக ஆவணம் எதுவும் எழுதி வாங்கவில்லை.

5) நகை, பொருட்கள்,சாமான்கள் வாங்கியதற்கு உண்டான இரசீதுகளை போலீசாரிடம் கொடுக்கவில்லை. என்னை தப்பாக பேசினால் மட்டும் நான் கோபப்படுவேன். தனிக்குடித்தனம் போகவேண்டும் என்று 1ம் எதிரியை கட்டாயப்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் 1ம் எதிரியிடம் தனிக்குடித்தனம் போக வேண்டும் என்று கட்டாயப்படுத்தியதால் தான் என் மாமனார், மாமியார் பிரிந்து சென்று எஸ்டேட்டில் குடியிருந்தார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் எங்களுடன் தான் இருந்தார்கள். என்னை என் கணவர் அடித்து எனக்கு காது கேட்காமல் போனதற்க்காக கோயமுத்தூரில் இருந்த போது புகார் எதுவும் கொடுக்கவில்லை.

6) 2011ம் ஆண்டில் எனக்கு வளைகாப்பு நடந்தது. வளைகாப்பின் போது நான் என்னுடைய நகையை நான் அணிந்திருந்தேனா என்றால் இல்லை. திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் வைத்து தான் எனக்கு பெண் குழந்தை பிறந்தது. மருத்துவமனையில் ஏற்பட்ட செலவை என் அம்மாவும், அண்ணனும் தான் பார்த்துக்கொண்டார்கள். ஒரு முறை மட்டும் 1ம் எதிரி என் குழந்தையை வந்து பார்த்தார்கள். என் கணவரின் தம்பி அம்மா, அப்பா ஆகியோரும் ஒரு முறை வந்து குழந்தையை பார்த்தார்கள். குழந்தை பிறந்த பிறகு என் அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன். இதுவரை அங்கு தான் இருக்கிறேன்.

7) பாதிரியார் என்னையும் என் கணவரையும் சேர்ந்து வாழ சமாதானம் செய்து வைத்தார் என்றும், நான் தான் எதிரியுடன் சேர்ந்து வாழ வில்லை என்று சொன்னேன் என்றால் ஒரு முறை மட்டும் சமாதானம் செய்து வைத்தார். ஆனால் என் கணவர் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்றால் நகை பணம் கொண்டு வர வேண்டும் என்றும், இல்லை என்றால் எனக்கு மனைவியாக இருக்க முடியாது என்று சொல்லிவிட்டார். எனக்கு காது கேட்காததற்கு நான் சிறு வயதில் இருந்தே பல வருடங்களாக சிகிச்சை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு எதுவுமில்லை.

8) நான் சிறு வயதில் இருந்தே காது கேட்காதபிரச்சனைக்காக சிகிச்சை

செய்து வந்தேன் என்றும் அதனால் தான் எனக்கு திருமணம் செய்ய தாமதம் ஏற்பட்டு விட்டதென்றும் ஆனால் அந்த விசயத்தை நான் எதிரிகளிடம் மறைத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு தற்போது கொஞ்சம் சத்தமாகப்பேசினால் தான் காது கேட்கும். என் கணவர் என்னிடம் பேசும் போது எனக்கு சரியாக காது கேட்காது என்றால் சரியல்ல. 3 முதல் 7 எதிரிகளை வழக்கின் விசாரணையின் போது நீக்கிவிட போலீசாரிடம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 7ம் எதிரி உமாமகேஸ்வரி என்பவரை மட்டும் தான் நீக்கி எழுதிக்கொடுத்துள்ளேன்.

9) 7ம் எதிரியை நீக்க காவல் ஆய்வாளரிடம் தான் எழுதிக்கொடுத்தேன். 7ம் எதிரியின் கணவர் கேட்டுக்கொண்டதால் அவர் பெயரை மட்டும் நீக்கி எழுதிக்கொடுத்துவிட்டேன். 1ம் எதிரியுடன் சேர்ந்து வாழ்வதற்கு பலமுறை எதிரி தயாராக இருந்தார் என்றும் நான் தான் அவருடன் சேர்ந்து வாழ மறுத்துவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. தற்போதும் 1ம் எதிரி என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருப்பதால் தான் எந்த ஒருவிவாகரத்து வழக்கையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நானும் சேர்ந்து வாழ தயாராகத்தான் இருந்து இதுவரை காத்திருந்தேன். ஆனால் 1ம் எதிரி தான் எனக்கு தெரியாமல் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டார்.

10) நான் எதிரிகள் மீது 3 வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். குடும்ப வன்முறை சட்ட வழக்கு ஜீவனாம்ச வழக்கு, இந்த வழக்கு ஆகிய மூன்று வழக்குகள் கொடுத்துள்ளேன். 1ம் எதிரியுடன் சேர்ந்து வாழ்வதற்கு நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் மிகவும் பிடிவாத குணம் கொண்டவர் என்றும், கோபப்படுவேன் என்றும் அதனால் தான் எதிரியுடன் சேர்ந்து வாழவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் அம்மாவும் அண்ணனும் 1ம் எதிரியுடன் சேர்ந்து வாழ நடவடிககை எடுத்தார்கள். 1ம் எதிரி தான் நகை பணம் கொண்டு வந்தால் தான் சேர்ந்து வாழ முடியும் என்று சொல்லிவிட்டார். 1ம் எதிரியின் தம்பி வெளிநாட்டில் வேலை செய்து

வருகிறார். 1ம் எதிரி அவரது குடும்பத்தாரும் வசதியாக இருப்பதால் நகை பணம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. 1, 2, 3 எதிரிகளுக்கு போதிய வருமானம் உள்ளது என்றும் வருமானத்திற்கு உண்டான மூலம் உள்ளது என்றும் நாங்கள் வறுமையில் உள்ளதாலும் என்னிடம் நகை பணம் கேட்கவேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடமிருந்து நகை பணத்தை வாங்கியுள்ளார்கள். நகை மற்றும் பொருட்கள் வாங்கியதற்கு உண்டான இரசீதுகளை எந்த ஒரு வழக்கிலும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

11) 1 முதல் 3 எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் நகை பணம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரியல்ல.

**4 முதல் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 3 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 4 முதல் 7 எதிரிகள் தங்கள் தரப்பு குறுக்கு விசாரணையாக பாவித்துக்கொள்ள கோருகிறார்.